بسم الله الرحمن الرحيم

## ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் [அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக] அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 9.1.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 9 Jan 2015 (Tamil)

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:–

உங்களால் இயன்ற அளவிற்கு அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள். மேலும் கேளுங்கள்; கட்டுப்படுங்கள். மேலும் செலவு செய்யுங்கள். இது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும். மேலும் எவர்கள் தனது நஃப்ஸின் கஞ்சத்தனத்திலிருந்து தப்பித்துக் கொள்வாரோ அவர்கள் வெற்றி பெறக் கூடியவர்களாவார்கள். நீங்கள் அல்லாஹ்விற்கு அழகிய கடன் கொடுத்தால் அவன் அதை உங்களுக்காக அதிகப்படுத்துவான். மேலும் உங்களை மன்னிப்பான். மேலும் அல்லாஹ் மிக்க மதிப்பளிப்பவனும், சகித்துக் கொள்பவனுமாவான்.

இன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஜமாஅத் தான் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக, நல்ல நோக்கங்களில் முன்னேற்றம் ஏற்படுவதற்காக அவனுக்காக செலவு செய்கின்றது. மேலும் செலவு செய்வதற்கு விருப்பமுடையதாக இருக்கின்றது. இஸ்லாத்தின் தப்லீக்கிற்காகவும், கொள்கை பரப்புனர்களை தயார் செய்வதற்கும், அவர்களை செயல் களத்தில் அனுப்பி வைப்பதற்கும், பிரசுரங்களை வெளியிடுவதற்கும், திருக்குர்ஆனை வெளியிடுவதற்கும், பள்ளிவாசல்களை கட்டுவதற்கும், பிரச்சார நிலையங்களை கட்டுவதற்கும், பள்ளிக் கூடங்களை நிறுவதற்கும், பல்வேறு நாடுகளில் வானெளி நிலையங்களை ஆரம்பிப்பதற்கும், அதன் மூலம் மார்க்கப் போதனைகளை பரப்புவதற்கும், மருத்துவமனைகளை நிறுவுவதற்கும், மனிதர்களுக்கு தொண்டு செய்கின்ற மற்ற பணிகளை செய்வதற்கும், மேலும் பல பணிகள் இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாகவும், அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாகவும் இருக்கின்றன. அதை இன்று உலகில் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தே செய்து வருகின்றது. இது ஏனென்றால், நாங்கள் இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு இந்தப் பணிகளின் ஆன்மாவைப் புரிந்துள்ளோம். நாங்கள் நஃப்ஸை கஞ்சத்தனத்திலிருந்து பாதுகாத்தவாறு எப்படிப்பட்ட மக்களுடன் இணைவதற்கான அறிவைப் பெற்றுள்ளோம் என்றால் அவர்கள் வெற்றி பெறக் கூடியவர்களாவார்கள். அதன் பொருள் விரிவானதாகும். வெற்றி என்பதை விட அதன் விளக்கம் மிக மேலானதாகும். அவர்கள் வெற்றி பெறக் கூடியவர்களாவர். தன்னுடைய நல்ல விருப்பங்களை முழுமைபடுத்தக் கூடியவர்களாவர். மேலும் அவர்கள் தங்களுடைய வாழ்க்கை மகிழ்ச்சிக்குரியதாக இருக்க வேண்டும் என்று விரும்பக் கூடியவர்களாவர். அது எப்படிப்பட்ட மகிழ்ச்சிக்குரிய வாழ்க்கை என்றால் அது இறைவனுடைய திருப்பிக்கு ஏற்ப இருக்கின்றது. மேலும் அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை இறைவனுடைய பாதுகாப்பில் வந்து விடுகின்றது. மேலும் அது நிரந்தரமாகி விடுகின்றது. அவர்கள் அல்லாஹ்வின் அருளினால் நிம்மதியைப் பெறக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மீது இவ்வுலகிலும், மறுமையிலும் இறைவனின் அருள் எப்போதும் இறங்கிக் கொண்டே இருக்கின்றது.

ஆக, எவர்கள் இறைவன் புறமிருந்து வெற்றியைப் பெறுகிறார்களோ அவர்களுடைய வெற்றி ஒரு எல்லைக்குட்பட்டதாக இருப்பதில்லை. மாறாக, அவர்களுடைய வெற்றிகள் அளவு கடந்தவையாகும். ஆக, இவ்வாறான வெற்றியைப் பெறுபவர்கள் எப்படிப்பட்ட நற்பேறு பெற்றவர்களாவார்கள். இறைவன் கடன்

வைப்பதில்லை. உங்களுடைய பொருள் தியாகங்களை இறைவன், நீங்கள் அவனுக்கு அழகிய கடன் கொடுத்திருப்பதைப் போன்று அதற்கு மதிப்பளிக்கின்றான். மேலும் அன்பிற்குரிய பார்வையினால் பார்க்கின்றான். மேலும் கடனை திருப்பி செலுத்துவதற்கான நேரம் வரும் போது இறைவன் மேலும் அதிகமாக வழங்குகின்றான். இதுமட்டுமின்றி, இந்த தியாகத்தினால் உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவது மட்டுமல்லாமல் மேலும் நன்மை செய்வதற்கான நற்பாக்கியத்தைப் பெறுவீர்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

ஆக, அல்லாஹ் எவ்வாறு மதிப்பளிக்கின்றான் என்பதை பற்றி உங்களால் கணித்துக் கூட பார்க்க இயலாது. இறைவனுடைய அருளைப் பெற்றவர்கள் எப்படிப்பட்ட நற்பாக்கியம் பெற்றவர்களாக இருப்பார்கள். இன்று இந்த உலகில் அஹ்மதிகள் மட்டும் தான் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதன் அறிவைப் பெற்றுள்ளார்கள். இதன் விளைவாக அஹ்மதிகள் மட்டும் தான் இந்த அருளிலிருந்து பயனடைகின்றனர். அஹ்மதிகள் கூறக்கூடிய பல்வேறு சம்பவங்கள் இருக்கின்றன. அதாவது அல்லாஹ் அவர்கள் மீது எவ்வாறு அருள் செய்தான். எவ்வாறு அவர்களுக்கு தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. மேலும் அவர்களின் நம்பிக்கையை விட அல்லாஹ்வின் அருளில் எவ்வாறு அவர்கள் பயனடையக் கூடியவர்களாக ஆனார்கள். இப்படிப்பட்ட சில சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

பெனினிலிருந்து நமது முபல்லிக் எழுதுகின்றார்கள். கோதோநவ்வைச் சேர்ந்த சல்மான் சாஹிப் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தார். டிசம்பரில் பெனினில் நடக்கின்ற ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள செலவாகக் கூடிய 1500 சிஃபாவைக் கூட சொந்தமாக செலவு செய்வதற்கு தகுதியற்றவராக இருந்தார்கள். எவ்வாறிருப்பினும் அவர்கள் முயற்சி செய்து ஒரு தரப்பிற்கான பயணத் தொகையை செலவு செய்து மாநாட்டிற்கு சென்றார்கள். திரும்பி வருவதற்கான பயணத் தொகை அவரிடம் இல்லை. பணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து வீடு வந்து சேர்ந்தார்கள். 4, 5 தினங்களுக்குப் பிறகு வக்ஃபே ஜதீத் சந்தா வசூல் செய்யக் கூடியவர் சல்மான் சாஹிப் வீட்டிற்கு சென்ற போது அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் 6000 பிரான்க் சிஃபாவைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். வசூல் செய்யக் கூடியவர், நீங்கள் இவ்வளவு அதிகமான தொகையை கொடுக்க வேண்டாம். கொஞ்சமாக கொடுங்கள். குழந்தைகளுக்காக வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் இது உங்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டதாகும் என்று கூறினார். அதற்கு அவர்கள், இறைவன் எனக்கு இந்த தொகையை கொடுத்திருக்கும் போது நான் ஏன் அவனுடைய வழியில் கொடுக்கக் கூடாது. இது என்னுடைய பணம் கிடையாது. இது இறைவனுடைய அமானத்தாகும். என்னிடம் மாநாட்டிற்கு செல்வதற்காகக் கூட எந்த தொகையும் இருக்கவில்லை. கஷ்டப்பட்டு ஒரு பயணத்திற்கான ஒரு தரப்பு தொகையை செலவு செய்து சென்றேன். ஆனால் திரும்பி வரும் போது அல்லாஹ் அதிகமான எனக்கு வழங்கினான். மேலும் அவர்கள் 2 நாட்களுக்குப் பிறகு 2000 சிஃபாவையும் அதிகமாக கொடுத்தார்கள்.

சிரோலியோனின் நமது முபல்லிக் கேன்மாரீஜனின் ஹாஜி ஷேஹூ சாஹிப் பற்றி எழுதுகின்றார்கள். செகரட்டரி வக்ஃபே ஜதீத், வக்ஃபே ஜதீத் சந்தாவிற்கான வாக்குறுதியை வாங்க சென்ற போது டாக்டர் ஹாஜி ஷேஹூ சாஹிப் தன்னுடைய மகளிடம் வாக்குறுதி எழுதும்படி கூறினார்கள். அவர்களுடைய மகள் 10,000 சிராலியோன் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார்கள். அவர்களுடைய மகள் 10,000 சிராலியோன் என்று கூறிய உடன் அவர்களுடைய தாய் இவ்வளவு பெரிய தொகையை எவ்வாறு கொடுப்பாய் என்று கேட்டார்கள். சில நாட்களுக்குப் பிறகு டாக்டர் சாஹிபை சந்திப்பதற்காக சில உறவினர்கள் அவர்களுடைய வீட்டிற்கு வந்தார்கள். திரும்பி செல்லும் போது அவர்களுடைய மகளுக்கு 15,000 சிராலியோன் கொடுத்தார்கள். அவர்களுடைய மகள் டாக்டர் சாஹிபிடம் உடனே 10,000 சிராலியோனைக் கொடுத்தார்கள். மேலும் இது நான் வாக்குறுதி கொடுத்த என்னுடைய சந்தாவாகும் என்று கூறினார்கள்.

ஆக, இந்த தொலைதூர பகுதிகளில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளுக்கும், அஹ்மதிகளுன் குழந்தைகளுக்கும் அல்லாஹ் அளவற்ற மனத் தூய்மையை வழங்கியிருக்கின்றான். மேலும் அவர்கள்

சந்தாவின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளார்கள். யார் அவர்களுடைய உள்ளத்தில் இந்த தூண்டுதலை ஏற்படுத்த முடியும். நிச்சயமாக இறைவனைத் தவிர வேறு யாருமில்லை. இவ்வாறிருந்தும் உலகின் குருடர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து வந்துள்ளார்கள் என்பது தெரிவதில்லை. புதிதாக வரக் கூடியவர்கள் மனத் தூய்மையிலும், பற்றிலும் முன்னேறிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்களிடம் நன்மையில் முன்னேற வேண்டும் என்ற ஆன்மா பழைய அஹ்மதிகளிடமும், பழைய அஹ்மதி குடும்பங்களிடமும் ஏற்படுவதற்கு கவனம் செலுத்த வேண்டும். மேலும் மிகுந்த கவலையோடு இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

கான்கோ கன்ஷாசேவின் முபல்லிக் எழுதுகின்றார். முபான்சா கோன்கோ ஜமாஅத்தைச் சேர்ந்தவர் முஸ்தஃபா சாஹிப் ஆவார்கள். இந்த வருடம் ரமலானில் தான் பைஅத் செய்தார். அப்போது அவர்களுடைய கிறிஸ்தவரான அவரது சகோதரி மிகவும் நோய்வாய்ப்பட்டு விட்டார்கள். மேலும் மிகப் பெரிய தொகை அதற்காக செலவானது. மேலும் அதே மாதத்தில் அவர்கள் பள்ளிவாசலில் பொருள் தியாகம் தொடர்பான திட்டத்தைப் பற்றி கேள்விப்பட்ட உடனேயே சந்தா கொடுத்தார்கள். மேலும் தன்னுடைய சகோதரியின் உடல் நிலைக்காக துஆ செய்யும்படி கேட்டுக் கொண்டவாறு சந்தாவும் செலுத்தினார்கள். இதன் பிறகு இவர்களுடைய சகோதரியின் உடன் நிலை சரியாகி விட்டது.

புதிதாக வந்தவர்களிடம் அல்லாஹ்வின் அருளால் சந்தா கொடுப்பதற்கான கவனம் முன்னேற்றம் கண்டு வருகின்றது. மேலும் களப்பற்ற தூய்மையுடன் அவர்கள் சந்தா கொடுத்து வருகின்றார்கள். இதே போன்று ஜமாஅத்தின் இன்னொரு களப்பற்ற நபர் அஃபானா சாஹிப் ஆவார்கள். ஒவ்வொரு மாதமும் 1,50,000 பிரான்க் ஏறக்குறைய 200 பவுண்ட் சந்தா கொடுக்கின்றார்கள். இந்த ஏழை நாடுகளில் இத்தொகை மிகவும் பெரிய தொகையாகும். இதுமட்டுமல்லாமல் அவர்கள் 2,50,000 பிரான்க் ஏறக்குறைய 330 பவுண்ட் ஸகாத்தாக கொடுத்துள்ளார்கள். மேலும் அல்லாஹ்வின் அருளால் ஈமானிலும், நிச்சய உறுதியிலும் மேலும் முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள்.

இந்தியாவின் காஷ்மீரிலுள்ள இன்ஸ்பெக்டர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள். கடந்த நாட்களில் காஷ்மீர் மாநிலத்தில் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. இதனால் ஸ்ரீ நகரிலுள்ள ஏறக்குறைய அனைவரது வீடுகளும் இதன் தாக்கத்திற்கு உள்ளாகியது. இன்ஸ்பெக்டர் சாஹிப் கூறுகின்றார்கள். எந்தவொரு வீட்டிற்கு நான் சென்றாலும் சந்தா வசூல் செய்வதற்காக வந்துள்ளேன் என்று கூறுவதற்கு எனக்கு தைரியம் வரவில்லை. கூறுகின்றார்கள். ஆனால் மக்கள் அவர்களே என்னிடம் வந்து சந்தா பற்றி கேட்டார்கள். இதைக் கண்டு நான் மிகவும் வியப்படைந்து விட்டேன். மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் பாக்கி சந்தாவை செலுத்துகின்றார்கள். அவர்களுடைய முகத்தில் கவலை இருந்த போதும் அவர்களுடைய முகத்தில் எவ்வித மாற்றத்தையும் பார்க்க இயலவில்லை. இந்த காட்சியைப் பார்த்து கண்களில் கண்ணீர் வழிந்தது. மேலும் பெருமானார் (ஸல்) அவர்களது சஹாபாக்கள் நினைவிற்கு வந்தார்கள். அவர்களிடம் உண்பதற்கு ஏதுமில்லாமல் இருந்தும் கூட தியாகத்தில் ஒருவர் மற்றவரை முந்திச் சென்றார்கள். உண்மையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது அன்பிற்குரிய ஜமாஅத்தைப் பார்த்து ஈமானில் முன்னேற்றம் ஏற்படுகின்றது.

பேனினிலிருந்து நமது முஅல்லிம் எழுதுகின்றார்கள். ஒரு புதிய அஹ்மதி தொடர்ச்சியாக அவருடைய குடும்பம் அஹ்மதியாகிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் சந்தா கொடுத்து வந்தார். அவர் கூறுகின்றார். நான் இன்று இதை கூறுவதை பெருமிதம் கொள்கின்றேன். அதாவது என்னுடைய குடும்பம் முழுவதும் அஹ்மதியாகி விட்டது. இது இறை வழியில் பொருள் தியாகம் செய்ததன் அருளேயாகும் என்று அவர் கூறுகிறார்.

இந்தியாவிருந்து கமருத்தீன் சாஹிப் இன்ஸ்பெக்டர் எழுதுகின்றார்கள். கேரளா மாநிலத்தில் ஒரு 24 வயதுள்ள ஒரு இளைஞரை சந்தித்தேன். அவர் கூறினார். நான் interior designing படித்து முடித்துள்ளேன்.

என்னுடைய தந்தையுடன் வியாபாரம் செய்ய ஆரம்பித்துள்ளேன். சந்தா வக்ஃபே ஜதீத் தொடர்பாக அவருக்கு செல்லப்பட்ட போது அப்போதே அவர் 2 லட்சம் ரூபாயாக தன்னுடைய சந்தா பட்ஜெட்டை எழுதினார். மேலும் இப்போது தான் வேலை ஆரம்பமாகியுள்ளது. வாக்குறுதியை எவ்வாறு பூர்த்தி செய்வேன் என்பதை இறைவன் தான் நன்கு அறிவான் என்று அவர் கூறினார். மேலும் கூறுகிறார்கள். துஆவிற்காக நீங்களும் எழுதுங்கள். நானும் எழுதுகின்றேன் என்று கூறினார். மீண்டும் வசூல் செய்வதற்காக சென்ற போது அவர் மிகவும் மகிழ்ச்சியுடன், அல்லாஹ்வின் அருளால் எனக்கு பல்வேறு வங்கிகளிலிருந்து interior designing ற்கான வேலை கிடைத்தது. இதன் மூலமாக வருமானத்திலும் அதிக அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. மேலும் அப்போதே அவர் தன்னுடைய வாக்குறுதியான 2 லட்சம் ரூபாயை முழுமையாக செலுத்தி விட்டார்.

மேலும் இந்தியாவிலிருந்து நாயிப் நாஸிம் மால் வக்ஃபே ஜதீத் எழுதுகின்றார்கள். உத்திர பிரதேசம் மாநிலத்திற்கு பொருளாதார சுற்றுப் பயணம் செய்த போது கான்பூரின் செகரட்டரி மால் முஹம்மது ஃபரீதுத்தீன் சாஹிபை சந்தித்தேன். அவர்களுடைய 8 வயது மகள் சஜீலா தன்னுடைய உண்டியலை கொடுத்து இதில் முழு வருடத்திற்கான சந்தா தொகை கொடுப்பான பணத்தை சேர்த்து வைத்துள்ளேன். நீங்கள் இதிலிருந்து எல்லா தொகையையும் எடுத்துக் கொள்ளுங்கள். மேலும் ரஸீது தாருங்கள் என்று கூறினாள். இது 8 வயது கொண்ட ஒரு சிறுமியாவாள். அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே நவ் திட்டத்திலும் பங்கு பெற்றுள்ளாள்.

குழந்தைகளின் உள்ளத்தில் உருவாகியுள்ள இந்த எண்ணத்தை முழுக்க முழுக்க இறைவனே அவர்களுடைய உள்ளத்தில் போட்டுள்ளான். ஆனால் வீட்டில் மார்க்கத்துடன் தொடர்புடைய சுற்றுச் சூழலை உருவாக்குவதும், மேலும் குழந்தைகளிடம் சந்தாவின் முக்கியத்துவம் பற்றி கூறுவதும், மற்ற நன்மைகளோடு இறைவணக்கத்தைப் பற்றியும் கூறுவதோடு அவ்வப்போது சந்தாவின் முக்கியத்துவம் தொடர்பாகவும் அவர்களிடம் கூற வேண்டியது பெற்றோர்களது பணியாகும். இப்படிப்பட்ட சம்பவங்களும் இருக்கின்றது. குழந்தைகள் அவர்களுடைய சந்தாவை கொண்டு வரும் போது அவர்களிடம் உங்களுடைய பெற்றோர்கள் உங்களுடைய சந்தாவைக் கொடுத்து விட்டார்கள் என்று கூறும் போது அக்குழந்தைகள் எங்களுடைய தந்தை கொடுத்த சந்தாவிற்க்கான கூலி அவர்களுக்கே கிடைக்கும். நாங்கள் எங்களுடைய கிடைக்கக் கூடிய பணத்திலிருந்தே நாங்கள் கொடுப்போம் என்று கூறுகின்றனர்.

U.K லஜ்னா வில் ஒரு பெண்மணி பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தார்கள். சந்தா கொடுக்க இயலாதவர்களாக இருந்தார்கள். அவர்களால் இயன்ற அளவிற்கு அவர்களிடம் சந்தாவிற்கான வாக்குறுதியை எழுதி வாங்கினோம். இந்த பெண்மணிக்கு தையல் தொழில் தெரியும். சிறிது நாட்களுக்குள் அவர்களுக்கு தையலுக்கான ஆர்டர்கள் கிடைக்க ஆரம்பித்தது. இதன் பிறகு அவர்கள் தன்னுடைய வாக்குறுதியை செலுத்துவதற்கான தகுதி பெற்றவர்களாக மட்டும் ஆகவில்லை. மாறாக, அதன் மூலமாக அதிகமாக வருவாய் வர ஆரம்பித்தது. மேலும் அப்பெண்மணி இதனால் தன்னுடைய வாக்குறுதியையும் அதிகப்படுத்தி எழுதினார்கள். இங்கு நான் இதனையும் கூறிக் கொள்கின்றேன். அதாவது தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீதில் U.K லஜ்னாக்கள் மாஷா அல்லாஹ் முயற்சி மற்றும் தைரியத்துடன் தன்னுடைய இலக்கை மட்டும் பூர்த்தி செய்யவில்லை. மாறாக, இலக்கை விட மிக அதிப்படியான தொகையை அல்லாஹ்வின் அருளால் செலுத்தியுள்ளார்கள்.

ஆக, இது தான் பொருள் தியாகம் தொடர்பான சில சம்பவங்களாகும். எவ்வாறு இறைவன் எவ்வாறு பன்மடங்காக திருப்பி கொடுக்கின்றான் என்பதையும் நாம் பார்த்தோம். இறைவன் உண்மையான வாக்குறுதியை கொடுப்பவனாவான். எங்கு இறைவனுடைய வார்த்தைகளின் உண்மை வெளிப்படுமோ அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்துடன் அது உலகிலுள்ள எந்த நாட்டில் இருந்தாலும் சரி இறைவனுடைய உதவியின் காட்சிகள் நமக்கு தென்படுகின்றது. வக்ஃபே ஜதீதின் இந்த திட்டம் பாகிஸ்தானிற்கு வெளியே உள்ள நாடுகளில் ஆப்ரிக்கா, இந்தியாவின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக குறிப்பாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஆரம்பித்தார்கள்.

அல்லாஹ்வின் அருளால் இப்போது ஆப்ரிக்காவின் 18 நாடுகளில் 95 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் எங்கு இஸ்லாத்தைப் பற்றி அறிமுகப்படுத்த அல்லது பிரச்சாரம் செய்ய வேண்டுமானால் பள்ளிவாசலைக் கட்டுங்கள் என்று குறிப்பாக அன்னார் கவனமூட்டினார்கள். இந்த வருடம் 204 புதிய பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுள்ளது. இதே போன்று 184 பிரச்சார நிலையங்கள் கட்டப்பட்டுள்ளது.

நான் கிலாஃபத்தின் முதல் வருடத்திலேயே எண்ணற்ற பைஅத்துகள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. இவர்களின் 70 சதவிகிதம் மக்களோடு தொடர்பை ஏற்படுத்தி மீண்டும் கொண்டு வாருங்கள். என்று ஜமாஅத்திற்கு கூறினேன். அல்லாஹ்வின் அருளால் இது தொடர்பாக ஜமாஅத்களும் முயற்சி செய்துள்ளது. குறிப்பாக ஆப்ரிக்கா. எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வின் அருளால் லட்சக்கணக்கில் புதிய தொடர்பு ஏற்பட்டது. மேலும் அவர்கள் திரும்பி வந்தார்கள். மேலும் இப்போது தர்பிய்யத்திற்காக சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் இதில் இன்னும் அதிமகாக கவனம் செலுத்த வேண்டிய அவசியமுள்ளது. தொடர்பை ஏற்படுத்துவதில் அதிமகான முயற்சி கானா செய்துள்ளது. அடுத்து நாயிஜீரியா. இவ்வாறு மற்ற ஆப்ரிக்க நாடுகளும் செய்துள்ளது. தன்ஸானியாவில் அதிக குறைபாடுகள் இருக்கின்றது. அவர்களும் முயற்சி செய்ய வேண்டும். போஸ்னியாவின் நிலைமை மோசமடைந்த போது ஜெர்மனிக்கு அதிகமான போஸ்னியாவைச் சேர்ந்தவர்கள் வந்தார்கள். போஸ்னியாவைச் சேர்ந்த 1 லட்சம் போர் பைஅத் செய்தார்கள். ஆனால் அவர்கள் தன்னுடைய நாட்டிற்கு திரும்பி சென்ற பிறகு தொடர்பும் முடிந்து விட்டது என்று கூறப்படுகிறது. இதே போன்று இந்தியாவிலும் மேற்கு வங்காளத்தில் பைஅத் நடைபெற்றது என்று கூறப்படுகின்றது. அவர்களையும் தேட வேண்டியது அவசியமாகும். நல்லுள்ளம் கொண்டவர்கள். யாரை இறைவன் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கின்றானோ அவர்கள் இன்ஷா அல்லாஹ் வருவார்கள். ஆனால் பலவீனமானவர்கள் தூரம் விலகிச் சென்றால் நிச்சயமாக நமக்கு அதனால் வருத்தம் இருக்கின்றது. அவர்கள் அல்லாஹ்வின் அருளை பெற்ற பிறகு அதை இழந்து விட்டார்கள். ஆனால் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுவிடும் என்ற கவலை நமக்கு கிடையாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் எண்ணிக்கையை விட களப்பற்ற, தூய நம்பிக்கையாளர்கள் தான் ஜமாஅத்தில் அதிகம் உருவாக வேண்டும் என்று அதிக அழுத்தம் கொடுத்து வந்தார்கள். அல்லாஹ் இந்த பணியைச் செய்வதற்கான நல்வாய்ப்பை ஜமாஅத்துகளுக்கு வழங்குவானாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். இப்போது நான் வக்ஃபே ஜதீதின் புதிய வருடத்திற்கான அறிவிப்பைச் செய்கின்றேன். மேலும் சென்ற வருடத்தில் சில தகவல்களையும் எடுத்துரைப்பேன். வக்ஃபே ஜதீதின் 57 வது வருடம் அல்லாஹ்வின் அருளை ஈர்த்தவாறு 31 டிசம்பர் அன்று நிறைவடைந்தது. மேலும் 58 வது வருடம் ஜனவரி 1 முதல் ஆரம்பமாகி விட்டது. முழு உலக அஹ்மதிய்யா ஜமாஅத்திற்று இந்த வருடம் அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதில் 62,09,000 பவுண்ட் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. சென்ற வருடத்தை விட 7,21,000 பவுண்ட் அதிகமாகும். அல்ஹம்துலில்லாஹ்.

பட்டியலில் பாகிஸ்தான் முதலிடத்தில் உள்ளது. அதன் பிறகு இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, கனடா, இந்தியா, ஆஸ்திரேலியா. ஆஸ்திரேலியாவிற்குப் பிறகு இந்தோநேஷியா, துபாய், பெல்ஜியம், இதற்கு பிறகு ஒரு அரபு நாடாகும்.

கரன்சி அடிப்படையில் ஆஸ்திரேலியா 123 சதவிகிதம் அதிகப்படுத்தியுள்ளது. கனடா 21 சதவிகிதமும், இந்தியா ஏறக்குறைய 17 சதவிகிதமும் அதிகப்படுத்தியுள்ளது. தனி நபர் செலுத்தும் அடிப்படையில் அமெரிக்கா 70 பவுண்ட் என்ற விதத்தில் முதலிடத்தில் உள்ளது. 59 பவுண்ட் என்ற விதத்தில் செலுத்தி சுவிட்சர்லாந்து, 51 பவுண்ட் என்ற விதத்தில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா 56 பவுண்ட், பிறகு பெல்ஜியம், பிரான்ஸ், கனடா பிறகு ஜெர்மனி. இந்த பெரிய ஜமாஅத்துகளில் ஜெர்மனி இறுதியாக உள்ளது.

வக்ஃபே ஜதீத் திட்டத்தல் இணைந்தவர்களின் எண்ணிக்கை 11,29,000 த்தை கடந்து விட்டது. எண்ணிக்கையை அதிகப்படுத்தியதின் அடிப்படையில் மாலி, பெனின், நைஜர், பொர்கினோ ஃபாசு, கேம்பியா, கேம்ரூன் போன்ற ஜமாஅத்கள் குறிப்பிடத்தக்கவை. ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் ஆப்ரிக்காவில் கானா முதலிடத்தில் உள்ளது. பிறகு நைஜீரியா, பிறகு மொரிஷியஸ்.

வசூலின் அடிப்படையில் இந்தியாவிலுள்ள மாநில ஜமாஅத்துகளில் கேரளா, ஜம்மு காஷ்மீர், தமிழ் நாடு, ஆந்திர பிரதேஷம், மேற்கு வங்காளம், ஒடிசா, கர்நாடக், காதியான், பஞ்சாப், உத்திர பிரதேசம், மஹாராஷ்டிரா, பிஹார், லக்ஷதீப், ராஜஸ்தான். இந்தியாவிலுள்ள ஜமாஅத்களின் வசூலின் அடிப்படையில் கருலாயி, கோழிக் கோடு, ஹைதராபாத், கொல்கத்தா, காதியான், கன்னூர் டாவுன், சோரோ, பேன்காடி, சென்னை, பெங்களூரு. இறுதியில் மூன்று ஜமாஅத்கள் இருக்கின்றன. கருனாகப்பள்ளி, பத்தபிரியம், கேரன்ங். அல்லாஹ் தியாகங்கள் செய்யக்கூடியவர்களின் உயிரிலும், பொருளிலும் அபிவிருத்தியை ஏற்படுத்துவானாக.

இறுதியில்டி நான் பாகிஸ்தானில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளுக்காக குறிப்பாக துஆ செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன். ரப்வாவில் சில நாட்களாக எதிரிகள் தரப்பிலிருந்து நிலைமைகளை மோசமாக்க பெரும் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. அல்லாஹ் அவர்களின் தீங்கிலிருந்து ஒவ்வொரு அஹ்மதியையும் பாதுகாப்பானாக. மேலும் அவர்களுடைய தீமையை அவர்கள் பக்கமே திருப்புவானாக. மேலும் ரப்வாவில் அமைதியான சூழ்நிலையை நிலைநாட்டுவானாக. அமைப்பாளர்களுக்கும், அரசாங்கத்திற்கும் இந்த விஷயத்தை சரியான முறையில் மேற்கொள்ளக் கூடிய அறிவை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக.

இதே போன்று முஸ்லிம் உலகத்திற்காகவும், ஐரோப்பாவில் வசிக்கக்கூடிய முஸ்லிம்களுக்காகவும் துஆ செய்யுங்கள். பிரான்ஸில் இஸ்லாம் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரால் ஒரு அநீதியான சம்பவம் அரங்கேறியுள்ளது. இதற்கும் இஸ்லாத்தின் போதனைக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு இவ்வாறு அடிப்பது, கொலை செய்வது இஸ்லாத்தின் போதனைக்கு உட்பட்டதல்ல என்பதை நாம் எப்போதும் கூறுகின்றோம். ஆனால் பெயர் தாங்கிய முஸ்லிம் அமைப்புகள் தன்னுடைய செயல்கள் மற்றும் அநீதிகளிலிருந்து வெளியேறுவதில்லை. இதன் விளைவாக இங்குள்ள முஸ்லிம்களுக்கும், அந்த நாட்டிலுள்ள உள்ளூர் மக்களும் தவறான எதிர் நடவடிக்கையை எதிர் கொள்ள வேண்டியது வரலாம். இதுமட்டுமல்லாமல், இந்த எதிர் நடவடிக்கையில் இந்த பத்திரிகையும், மேலும் அங்குள்ள மக்களும் மேலும் மீடியாக்களும் தவறான எதிர் நடவடிக்கையை மேற்கொண்டவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தவறான முறையில் தாக்குதல் நடத்த இயலும். ஆனால் அவ்வாறு தவறான எதிர் நடவடிக்கை நடந்தாலும் இந்த முஸ்லிம்களுக்கு புரிய வைப்பதற்கு யாருமே கிடையாது. மேலும் அவர்களும் எதிர் நடவடிக்கையை மேற்கொள்வார்கள். மேலும் இவ்வாறு குழப்பங்கள் பரவிக் கொண்டே சொல்லும். மேலும் அது அதிகமாவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றது. இன்று இவ்விரு தரப்பினரையும் அநீதியிலிருந்து காப்பாற்றுவதற்கு துஆ செய்வது அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களுடைய பணியேயாகும். இவ்வாறே தரூது ஷரீஃப் அதிகமாக இந்நாட்களில் ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். மேலும் எவர்கள் தன்னுடைய வட்டத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு செயல் ரீதியிலான முயற்சிகளை செய்ய முடியுமோ அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் உலகத்தை குழப்பத்திலிருந்து காப்பாற்றி இரட்சிப்பை வழங்குவானாக. இந்த குழப்பமான சூழ்நிலை விரைவாக அமைதியான சூழ்நிலையாக மாறட்டுமாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 9.1.2015
Summarized by Nazarath Nashr-O-Isha’ath
Tamil Translation : Muallim. A. Khaleel Ahmad
Published By Nazarath Nashr-O-Isha’ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516